NSW கல்வி திணைக்களம்

Parent, carer and student factsheet

No prohibited knives at school

பெற்றோர், பராமரிப்பாளர் மற்றும் மாணவர்-மாணவியருக்கான தகவல்-ஏடு

தடை செய்யப்பட்டுள்ள கத்திகள் எதையும் பாடசாலைக்குக் கொண்டுவரக் கூடாது

ஆஸ்திரேலியாவிலேயே கத்திகளைப் பற்றிய மிகவும் கடினமான சட்டங்களை NSW மாநிலம் கொண்டுள்ளது. பொது இடம் ஒன்றில் அல்லது பாடசாலையில் மாணவ-மாணவியர்கள் தடை செய்யப்பட்டுள்ள கத்தி ஒன்றை வைத்திருப்பது சட்ட விரோதமாகும். குறைந்தபட்சத் தண்டனை $4,400, 4 ஆண்டு கால சிறைவாசம் அல்லது இவை இரண்டுமாகும். அதிகபட்ச அபராதம் $11,000 ஆகும்.

எந்தவொரு சூழ்நிலையிலும் தடை செய்யப்படுள்ள கத்திகள் எதுவும் பாடசாலைக்குள் அனுமதிக்கப்பட மாட்டாது

அனைத்து மாணவ-மாணவியரையும் பாதுகாப்பாக வைத்துக்கொள்வதற்காகப் பாடசாலையின் கொள்கைத் திட்டங்கள் வடிவமைக்கப்படுவதால், தடை செய்யப்பட்ட எவ்வகைக் கத்தியும் பாடசாலைக்குள் அனுமதிக்கப்பட மாட்டாது. மடிப்புக் கத்திகள், உறை கத்திகள், குத்துக் கத்திகள், 'ட்ரென்ச் கத்திகள்', 'பட்டெர்ஃப்ளை கத்திகள்' மற்றும் 'ஸ்டார் கத்திகள்' அல்லது ஆயுதமாகப் பயன்படுத்தப்படவல்ல எந்தவொரு (உளி போன்ற) பொருளும் இவற்றில் அடங்கும்.

பாடசாலையில் மாணவ-மாணவி ஒருவரிடம் கத்தி ஒன்று இருப்பது கண்டுபிடிக்கப்பட்டால், பாடசாலை அதிபர் காவல்துறையினரை அழைக்கலாம். அம்மாணவ-மாணவியானவர் உடனடியாகப் பாடசாலையிலிருந்து வெளியேற்றப்படவும் அல்லது இடைநிறுத்தம் செய்யப்படவும் முடியும்.

மாணவ-மாணவி ஒருவர் அவருடைய பையில் அல்லது 'லாக்கர்'-இல் கத்தி ஒன்றை வைத்திருப்பதும், அவர் அதைப் பயன்படுத்தாவிட்டாலும், அல்லது யாரையும் அதை வைத்து அச்சுறுத்தவில்லை என்றாலும் கூட, கத்தி ஒன்றைத் தம் வசம் வைத்திருப்பதாகவே கொள்ளப்படும். தற்பாதுகாப்பிற்காகக் கத்தி ஒன்றை வைத்திருப்பதும் சட்டவிரோதமானதாகும். பொதுநலம் அல்லது பாதுகாப்பினைப் பற்றிய கரிசனங்கள் ஏதுமிருந்தால், அது குறித்து பாடசாலை அதிபருக்குத் தெரியப்படுத்தப்படவேண்டும்.

வெண்ணை-வெட்டுக் கத்திகள் அல்லது பழ-நறுக்குக் கத்திகளை மதிய உணவுப் பெட்டிக்குள் வைத்து அனுப்பவேண்டாம் என்றும், அல்லது கைவினைகளுக்கான கத்தி உபகரணங்களைக் கொடுத்து அனுப்பவேண்டாம் என்றும் பெற்றொர்களுக்கும் பராமரிப்பாளர்களுக்கும் அறிவுரைக்கப்படுகிறது. சமையல் அல்லது கைவினைப் பாடங்கள் போன்ற கத்திகளின் பயன்பாடு தேவைப்படும் பாடங்களில் மாணவ-மாணவியின் ஆசிரியர் கருவிகளை விநியோகித்து அவற்றின் பயன்பாட்டினை மேற்பார்வை செய்வார்.

பாடசாலையில் இருக்கும்போது பாதுகாப்பாகவும், பத்திரமாகவும் இருப்பதற்கான உரிமை ஒவ்வொரு மாணவ-மாணவிக்கும் உள்ளது. பாடசாலையில் இருக்கும்போது எவ்வொரு வேளையிலும் கத்தி ஒன்றை வைத்திருப்பதற்கான நல்லதொரு காரணம் ஒரு மாணவ-மாணவிக்கு இருக்க இயலாது.

'உபசரணை' (hospitality) போன்ற முதுநிலைப் படங்களைக் கற்கும் மாணவ-மாணவியர்களுக்கு சொந்தக் கத்திகளை வைத்திருக்க வேண்டிய தேவைகள் இருக்கலாம். இந்தப் பாடங்களைப் பற்றியும், சட்டப்படி பாடசாலைக்குள் கத்திகளைக் கொண்டுவரல் மற்றும் அங்கிருந்து அவற்றை எடுத்துச் செல்லல் செயல்பாட்டுமுறைகளைப் பற்றியும் பெற்றோர்கள், பராமரிப்பாளர்கள் மற்றும் மாணவ மாணவியர்களுக்கு பாடசாலை அறியத்தரும்.

NSW GOVERNMENT

மிகவும் கடுமையான அபராதங்கள் செல்லுபடியாகும்

சட்டமானது பெற்றோர்ளையும், பராமரிப்பாளர்களையும் பொறுப்புள்ளவர்களாக்குகிறது. பாடசாலையினது விதிமுறைகளும், இந்த மாநிலத்தின் கத்திகளைப் பற்றிய சட்டங்களும் அவர்களுடைய பிள்ளைக்குத் தெரிந்திருக்கிறது என்பதைப் பெற்றோர்களும், பராமரிப்பாளர்களும் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

தமது பிள்ளைகள் பாடசாலைக்குக் கத்தி ஒன்றைக் கொண்டுவர பெற்றோர்களும், பராமரிப்பாளர்களும் தமது பிள்ளைகளை அனுமதிப்பார்களேயானால் அவர்களுக்கும் அபராதம் விதிக்கப்படக் கூடுமாதலால், இந்த சட்டங்களைப் பற்றி அவர்களும் தெரிந்துகொண்டிருக்க வேண்டும்.

கத்தி ஒன்றை வைத்திருப்பதாக சந்தேகிக்கப்படும் எவ்வொரு இள-வயதினரையும் காவல்துறையினர் சோதிக்கவும், அத்தகைய சோதனையின்போது கண்டெடுக்கப்படக்கூடிய ஆபத்தான பொருள் எதையும் அவர்கள் கைப்பற்றவும் முடியும். காவல்துறையினரது இவ்வாறான சோதனைக்கு அப்படி சோதிக்கப்படும் இள வயதினர் கட்டாயம் உடன்பட்டாக வேண்டும், அல்லது அவர்கள் கைது செய்யப்பட்டு அவர்கள் மீது குற்றம் சுமத்தப்படலாம்.

கத்திகளோடு சம்பந்தப்பட்ட தாக்குதல்கள், அல்லது அச்சுறுத்துதல்களுக்கு மிகக் கடுமையான அபராதங்கள் உள்ளன. உதாரனமாக, தகராறு ஒன்றில் மாணவ-மாணவி ஈடுபட்டு யாராவதொருவரைக் கத்தியால் காயப்படுத்தும் நிகழ்ச்சி.

இப்படிப்பட்ட குற்றச்செயல் ஒன்றை மற்ற இளம் வயதினர்களோடு மாணவ-மாணவி ஒருவர் புரிந்தால், தண்டனைகள் இன்னும் கடுமையானதாக இருக்கும். சில தருணங்களில், சிறைவாச காலம் 14 முதல் 25 ஆண்டுகள் வரைக்குமானதாக இருக்கலாம்.

16 வயதிற்குக் கீழ்ப்பட்ட ஒருவருக்கு எவரேனும் கத்தி ஒன்றை விற்பதும் சட்டவிரோதமாகும்.

விதிவிலக்குகள்

கத்தி ஒன்றை எடுத்துச்செல்வதற்குத் தேவையுள்ள, மற்றும் கத்தி ஒன்றை வைத்திருப்பதற்கான ‘நியாயமான காரணம்’ ஒன்றை ஒருவரால் உறுதிப்படுத்த இயலுமான சூழல்கள் இருக்கலாம்.

ஒரு ‘நியாயமான காரணம்’ என்பது பின்வரும் காரியங்களுக்காக, ஆனால், இவை மட்டுமல்ல, ‘நியாயமான முறையில் அவசியப்படும்’ தருணங்களை உள்ளடக்கும்:

- செய்யும் தொழில், கல்வி அல்லது பயிற்சி ஆகியவற்றை சட்டத்திற்கு உட்பட்டு மேற்கொள்வதற்காக
- சட்டத்திற்கு உட்பட்ட கேளிக்கை, பொழுதுபோக்கு, அல்லது விளையாட்டிற்காக
- உண்மையான மத காரனங்களுக்காக, அல்லது
- மேலே சொல்லப்பட்டுள்ள ஏதாவது ஒன்றிற்குச் செல்லும் பொழுது அல்லது அங்கிருந்து திரும்பும் பொழுது.

தொலைபேசி மொழிபெயர்த்துரைப்பாளர் சேவை

இன்னும் கூடுதலான தகவல்கள் உங்களுக்குத் தேவைப்பட்டால், தயவுசெய்து பாடசாலை அதிபரை அழையுங்கள். உங்களுடைய விசாரிப்பில் உங்களுக்கு உதவ மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் தேவைப்பட்டால், 131 450-இல் ‘தொலைபேசி மொழிபெயர்த்துரைப்பாளர் சேவை’யை அழைத்து உங்கள் மொழியில் மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் வேண்டுமெனக் கேளுங்கள்.

நீங்கள் அழைக்க விரும்பும் இலக்கத்தினை தொலைபேசி இயக்குநருக்குச் சொல்லுங்கள், உங்களுடைய உரையாடலில் உங்களுக்கு உதவுவதற்காக மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவரை அவர் இணைப்பிற்குக் கொண்டுவருவார். இந்த சேவைக்காக உங்களிடமிருந்து கட்டணம் அறவிடப்படாது.